# சங்கத் தொகை நூல்களில் உடைக் கலைச் சொற்கள்

**கா. சுசீலா & முனைவர் இரா. இந்து**

**அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை**

**தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.**

63

**கட்டுரைச் சுருக்கம்**

'ஆடை இல்லா மனிதன் அரை மனிதன்' என்றும் 'ஆள் பாதி ஆடை பாதி' என்றும் வழங்கும் பழமொழிகள் சமுதாயத்தில் ஆடையின் மதிப்பினைச் சுட்டுகின்றன. ஆடை என்பது மனிதனின் அடிப்படைத் தேவையாக விளங்குகிறது. சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப ஆடை அணிவதில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. சங்க இலக்கியங்களில் காணப்படும் உடை சார்ந்த கலைச் சொற்களை இக்கட்டுரையில் எடுத்து இயம்பப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

தழை- தொடலை – உடுக்கை – துகில் – உடை – அறுவை – புதை – மடி – காழகம் - கலிங்கம் – கிழி - கரை - புகர் – உத்தரியம் - பை – போர்வை - பட்டு

**முன்னுரை**

உடை, போர்வை, கச்சு, வட்டு, மெத்தை, சும்மாடு, படாம், திரை, மேற்கட்டி, இரட்டுத்துணி, சட்டை, கொடி, உரி, பரிவட்டம் எனப் பல வகைப் பெயர்களில் ஆடை குறிக்கப்படுகிறது. சங்க காலத்தில் எண்ணற்ற ஆடைகள் உருவாக்கப்பட்டன. அவை தோற்றம், நிறம், வடிவம், தன்மை, அளவு போன்றவற்றில் மாறுபாட்டைப் பெற்றிருந்தன. பாம்பின் தோல், புகை, பனி, அருவி நீர், பாலாவி போன்றவற்றுடன் உவமைப்படுத்திக் கூறும் வகையில் மென்மை பெற்ற ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. சங்கத் தொகை இலக்கியங்களில் ஆடை தொடர்பாகத் தழை, தொடலை, உடுக்கை, துகில், உடை, அறுவை, புதை, மடி, காழகம், கலிங்கம், கிழி, கரை, புகர், உத்தரியம், பை, போர்வை, பட்டுப் போன்ற கலைச்சொற்களை பற்றி இக்கட்டுரையில் வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது.

**சங்கத் தமிழரின் ஆடை நாகரிகம்**

**… .. … … … … … … … நாடன்**
**உடுக்கும் தழை தந்தனனே அவையாம்**
**உடுப்பின் யாய் அஞ்சுதுமே கொடுப்பின்**

**(நற். 359)**

தழையாடையைச் சங்கத் தமிழ்ப் பெருமக்கள் விரும்பி அணிந்துள்ளமைக்கு மேற்காணும் நற்றிணைச் செய்யுள் அடிகள் சான்றாகின்றன. பண்டைத் தமிழகத்தில் பருத்தி மிகுதியாகப் பயிர் செய்யப் பட்டமையால் நெசவுத் தொழில் செழித்தோங்கியது.

**எஃகுறு பஞ்சிற் றாகி வைகறை (நற். 247)**

பருத்தியினை விளைவித்துப் பஞ்சை எடுத்துக் கொட்டை நீக்கி வில்லால் அடித்துப் பின்னர் நூலாக நூற்று ஆடைகளை நெய்வர். பருத்தியால் நெய்யப்பட்ட உடையைத் துகில் என்று குறிப்பிடுவர். பட்டு உடையைக் களைந்துவிட்டு வெண்துகில் உடுத்துவதும் வழக்கமாகும்.

**பட்டு நீக்கித் துகில் உடுத்தும்** (பட்டின. 106)

புலைத்தியர் துகில் உடைகளைக் கஞ்சியில் தோய்த்து உடைகளை உலர்த்துவர்.

**பசை விரற் புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய**

**பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்** (அகம்.387)

பட்டு வகைகளில் சீனப்பட்டிற்குத் தனி மதிப்பு உண்டு. சங்க காலத்தில் அரசர், அரசியர், செல்வந்தர் போன்றோர் மிகுதியும் பட்டுடை அணிந்துள்ளனர். தலைவன் பட்டு உடுத்தியமையைச் சங்கத் தொகை நூல் குறிக்கிறது.

**அணி கிளர் சாந்தின் அம்பட்டு இமைப்ப** (அகம் . 236)

சங்க காலம் முதல் இக்காலம் வரை தனிச்சிறப்பு வாய்ந்ததாகப் பட்டுடை விளங்குகிறது. கண்கவரும் வண்ணமும் ஒளிரும் தன்மையும் கொண்டவை பட்டுடைகளாகும். சங்க காலப் பட்டுடைகளில் கரையில் திரண்ட முடிச்சுகளை உடையவற்றை விரும்பி அணிந்தனர்.

**தழை**

தழை என்பது தழையாலான உடையைக் குறிப்பதாகும். தழையே அணியாக உள்ளமையால் தழையணி என்னும் சொல் வழக்கும் தொகை நூலில் உள்ளது. புறநானூற்றுத் தாபதநிலைப் (கைம்மை) பாடல் ஒன்றில் மலரிதழ்களால் நெறித்துக் கட்டி அமைத்த ஒருவகை ஆடை, 'தழை' என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறது.

சிறிய வெண்மையான ஆம்பல் மலர்கள் முன்பு இளமையுடன் இருக்கும் காலத்தில் தழையாடையாய் விளங்கி உதவின. இப்பொழுது பெரும் செல்வந்தனான கணவன் மறைந்துவிட்டான். மனைவி உண்ணும் வேளை தவறிவிட்டது. இத்தகைய துன்பமிக்க பொழுதில் உண்பதற்கு வேண்டிய அல்லியிடத்து (ஆம்பல்) உண்டாகும் புல்லரிசியே உதவுகிறது. அத்தகைய ஆம்பல் மலர் (அல்லி) இரங்கத்தக்கதும் வருந்தத்தக்கதுமாக விளங்குகிறது என்கிறது பாடல்.

**அளியதாமே, சிறு வெள் ஆம்பல்!**

**இளையமாகத் தழை ஆயினவே;**

**இனியே பெரு வளக் கொழுநன் மாய்ந்தென, பொழுது மறுத்து,**

**இன்னா வைகல் உண்ணும்**

**அல்லிப் படூஉம் புல் ஆயினவே**

(புறம். 248)

தழையாடையை உடுத்தியமையால் பொலிவு பெற்ற ,பக்கம் உயர்ந்த அல்குலினை உடையவர்கள் நெய்தல் நிலப் பெண்டிர். பட்டினத்தின் துறைமுகத்தில் விளங்குகின்ற ஒளியையுடைய முத்துகளோடு வலம்புரிச் சங்கினைச் சொரிந்து, குளிர்ந்த துறையிலுள்ள தெய்வத்தை வாழ்த்தி வணங்குவர்.

**தொடலை**

தொடலை என்னும் சொல்லும் தழையுடையைக் குறிக்கும். வளைந்து சுருண்ட கூந்தல் அசைந்தாட, அழகொழுகும் அல்குலில் அணிந்த தழையாடை அலைபாய நடந்து செல்லும் தலைவியைத் தலைவன், பாங்கனிடம் சுட்டுகிறான்.

**ஐது அகல் அல்குல் கவின்பெறப் புனைந்த**

**பல்குழைத் தொடலை ஒல்குவயின் ஒல்கி**

(அகம். 390)

நிலமாகிய முதற்பொருளோடு ஒன்றி நிற்கும் கரிய கொத்துகளை உடையது நொச்சி. இதன் இலை கண்ணுக்கு நிறைந்த அழகுடையது. மெல்லிய இழைகள் அணிந்த இளமகளிர், தம் அழகிய அகன்ற அல்குலில் நொச்சித் தழையை எழிலாக அணிந்திருப்பர்.

**உடுக்கை**

உடுக்கை என்பது உடுத்தியிருக்கும் உடையைக் குறிக்கும் சொல்லாகும். விரிந்த, அலை சூழ்ந்த கடலை ஆடையாகக் கொண்ட அகன்ற உலகத்தைப் பெற்றாலும் காதலனைத் தவிரப் பிறரைக் கணவனாக நற்குடியில் பிறந்தோர் கருதார்.

**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்,**

**துகில்**

துகில் என்பது உடையைக் குறிக்கும். பெருத்த தோளையும் குளிர்ந்த கண்களையும் இளைய முலைகளையும் பூத்தொழில் உடைய துகில் அணிந்த அல்குலையும் தேனீக்கள் சூழும் கூந்தலையும் மின்னுகின்ற அணிகளையும் கொண்ட விறலியர், சேரன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் மறத்தன்மையைப் பாட, அவன் இரவலர் துன்பம் நீக்குவான் என்கிறது பதிற்றுப்பத்து.

**வீங்கு இறைத் தடைஇய அமை மருள் பணைத் தோள்,**
**ஏந்து ஏழில் மழைக்கண், வளைந்து வரல் இள முலை,**
**பூந் துகில் அல்குல், தேம் பாய் கூந்தல்,**
**மின் இழை விறலியர் நின் மறம் பாட;**
**இரவலர் புன்கண் தீர**

**(பதிற்று. 54:37)**

கடலிற் செய்த அருஞ்செயல்கள் குறித்துச் சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் என்றும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்றும் இவ்வரசன் போற்றப்படுகிறான்.

பாம்பு படம் எடுத்தாற் போன்ற மணிகள் பல கோக்கப்பெற்ற மேகலையையும் நுண்ணிய துகில் ஒதுங்குவதால் வெளித்தோன்றும் இழையணிந்த அல்குலையும் பெருந்தோளையும் நீலமணி போன்ற கூந்தலையும் உடையவர் இளமடந்தையர்.

**அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல் காழ்**
**வீடுறு நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்**
**திருந்துஇழை அல்குல், பெருந் தோட் குறுமகள்**

**(நற்.366)**

**உடை**

சங்கத்தொகை நூல்களின் சில இடங்களில் உடை என்ற ஆடையைச் சுட்டும் நேரடிச் சொல் இடம்பெறுகிறது. அகப்புற வாழ்வியலில் உடையின் தாக்கம் பெரும்பான்மையாகக் காட்டப்பட்டுள்ளது. தாவர உடை, விலங்குத் தோல் உடை, பருத்தி உடை எனப் பல வகைகளைச் சங்கத் தொகை நூல்களில் உணரமுடிகிறது.

கிழக்குத் திசையில் தோன்றிய கதிரவன் அடர்ந்த இருளை அகற்றியது. புலவரின் உடை பழைய பொலிவை இழந்து, நைந்து, பருத்த இழைகள் கெட்டுக் கரை கிழிந்து கிடந்தது. அதனைக் கண்ட நல்லியாதன் மனம் இரங்கினான். அப்புலவருக்குப் பரிசுபொருள் நல்கினான்.

**குணக்குளழு திங்கள் கனைஇருள் அகற்ற,**

**பண்டுஅறி வாரா உருவொடு, என் அரைத்**

**தொன்றுபடு துளையொடு பருஇழைபோகி**

**(புறம்.376)**

தலைவியைத் தூய உடையால் பொலிவுறச் செய்த சுற்றத்தார் பெரு வியப்புடன் ஒன்றுகூடினர். மேகம் ஒலித்தமை போன்ற மணவொலிமிக்க பந்தரில் அவளுக்குச் சிறப்பாக அணிகலன் அணிவித்தனர்.

**தூஉடைப் பொலிந்து மேவரத் தோன்றி**

**மழைபட் டன்ன மணல்மலி பந்தர்**

**இழை அணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றி**

**(அகம். 136)**

அச்சம் தரும் யானை, அணி செய்யும் உடையை அணிந்ததுபோலத் தாழம்பூக்கள் பெரிய புதரில் மிகுந்திருந்தன.

**உரு கெழு யானை உடை கோடு அன்ன**

**ததர் பிணி அவிழ்ந்த தாழை வான் பூ**

**(நற். 299**

**அறுவை**

ஆடையின் பிற பெயராக அறுவை விளங்குகிறது. அறுக்கப் படுவதால் அறுவை எனப்பட்டது. சிறிய வெண்மையான குருகு பறவை, துவைத்து வெளுத்த தூய்மையான ஆடை போன்ற நல்ல நிறத்தில் வெண்மையாகக் காட்சி தரும்.

**சிறு வெள்ளாங்குருகே! சிறு வெள்ளாங்குருகே!**

**துறை போகு அறுவைத் தூ மடி அன்ன**

**நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே**

**(நற். 70)**

ஓடாத கொள்கையினையும் ஒளிரும் கழல் அணிந்த காலையும் நிலத்தில் படுமாறு தொங்கக் கட்டிய விரிந்த நூலாலான ஆடையையும் மறவர்கள் கொண்டிருப்பர்.

**ஓடாப் பூட்கை, ஒண் பொறிக் கழல் கால்**

**இரு நிலம் தோயும் விரிநூல் அறுவையர்**

**(பதிற்று.34:2-3)**

ஆடை சுற்றப்பட்ட பெரிய குடுமியையும் சிறிய பை தொங்க விடப்பட்ட வளைந்த கோலையும் உடையவன் அறிவுமிக்கவனான வெறியாடும் வேலன்.

**அறுவை தோயும் ஒருபெருங் குடுமி**

**சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்**

**(அகம். 195)**

**புதை**

புதை என்பது ஆடையின் மறுபெயராகும். முதுகினை வளைத்துக் கொண்டு புதுப் புடவைக்குள் தலைவி ஒடுங்கிக் கிடந்தாள். தலைவன் அவளை அணுகி அவள் முதுகினைத் தழுவிக் கொள்ளும் விருப்பத்துடன் முகத்தை மூடியிருந்த ஆடையை விலக்கினான்.

**ஒடுங்கினள் கிடந்த ஓர் புறம் தழீஇ**
**முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப**

**(அகம்.86)**

**மடி**

ஆடையை மடி எனக் குறிக்கும் வழக்கம் சங்க இலக்கியத்தில் உண்டு. பொருள் தேடுவதற்காகச் செல்லும் தலைவனைத் தோழி செலவழுங்- குவிப்பாள். செலவழுங்கல் என்பது தலைவன் பிரிந்து செல்ல முனையும் போது அதனைச் சில காலம் தாழ்ச்சிச் செய்யத் தூண்டுவதாகும்.

**சாயல் இன் துணை இவட் பிரிந்து உறையின்**
**நோய் இன்றாக செய் பொருள்! வயிற்பட**
**மாசு இல் தூ மடி விரிந்த சேக்கை**

**(அகம்.13)**

ஔவையாரின் புறநானூற்றுப் பாடலில் அதியமானின் கொடைத் திறம் போற்றியுரைக்கப்படுகிறது. தன் இடையில் இருந்த பழமையான நீர்ப்பாசி போன்ற ஆடையினைக் களைந்து, அழகிய பகன்றை மலர் போன்ற புத்தாடை கொடுத்து உடுத்தச் செய்வான் அதியமான் என்கிறார் ஔவையார்.

**முதுநீர்ப் பாசி அன்ன உடைகளைந்து**
**திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ**

**(புறம். 390)**

மடி என்னும் சொல் புறம். 390:15, அகம். 54:10 ஆகிய இடங்களிலும் பயின்றுள்ளது.

**காழகம்**

ஆடையின் ஏனைய பெயர் காழகம் என்பதாகும். நிலத்தில் பல் விழுந்தது போலும் எண்ணெயைத் தலையில் தடவியதுபோலும் ஆண் பன்றி மீது ஏறுவதுபோலும் ஆடையைக் களைந்ததுபோலும் படைக்கருவி கவிழ்வது போலும் தீய அறிகுறிகளைக் கனவில் கண்டும் நனவில் தீரத்துடன் போர்புரியும் வல்லமை உடையவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் எனக் கோவூர்கிழார் பாடுகிறார்.

**எயிறு நிலத்து வீழவும் எண்ணெய் ஆடவும்**
**களிறு மேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்**
**வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்**
**கனவின் அரியன காணா, நனவில்**
**செருச் செய் முன்ப!** **(புறம்.41)**

கலித்தொகைப் பெண் ஒருத்தி நெகிழ்ந்து அடியிலே தாழ்ந்த ஆடையை ஒரு கையால் பற்றிக்கொண்டாள். மற்றொரு கையால் முடித்த முடி குலைந்த கூந்தலைப் பிடித்துக் கொண்டு மலர் நிறைந்த குளத்தில் பாய்ந்தாள்.

**ஒருத்தி, அரிமாண் அவிர் குழை ஆய் காதுவாங்க**

**ஒருத்தி, வரி ஆர் அகல் அல்குல் காழகம்**

**(கலி. 92)**

காழகம் பற்றிய குறிப்பு, கலித்தொகையின் 73ஆம் பாடலில் 37, 38 வரிகளில் பதிவாகியுள்ளது.

**கலிங்கம்**

ஆடையைக் குறிக்கும் கலிங்கம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெறுகிறது. வேனிற்கால வெம்மை போன்ற தம் வறுமை நீங்க, அரிய கலன்கள் பலவற்றையும் வேலைப்பாடு செய்யப்பட்ட வெண்மையான ஆடையையும் மழை போன்ற வள்ளன்மை உடைய சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் நல்கினான் என நெகிழ்ந்து உரைக்கிறார் புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

**பாம்புஉரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு**

**மாரி அன்ன வண்மையின் சொரிந்து**

**வேனில் அன்ன என்வெப்பு நீங்க**

**அருங்கலம் நல்கி யோனே**

**(புறம்.397)**

கல்வெட்டுக்களின் காலத்துக்கு கிழி என்பது ஆடையைக் குறிக்கும். எள்ளைப் பிழிந்த நெய்யோடு வெள்ளைத் துணியும் வேண்டாது. சந்தனமரம் செழித்த மலைச்சாரலில் உள்ள மலைப்பகுதியிலிருந்து சிறந்த அணிகலன்களைப் பெற்ற விறலி கூத்தாடுவாள்.

**எண் பிழி நெய்யொடு வெண் கிழி வேண்டாது**

**சாந்து தலைக்கொண்ட ஓங்கு பெருஞ் சாரல்**

**விலங்கு மலை அடுக்கத்தானும்**

**கலம் பெறு விறலி ஆடும் இவ் ஊரே**

**(நற். 328)**

**கரை**

கரை என்பது ஆடையின் கரைப் பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். ஊரார் நீர் உண்ணும் கேணியில் படர்ந்த பெரிய இலை உடைய பாசியின் வேர் போன்று கிழிந்த உடையைக் களைந்துவிட்டு, செறிந்த கரையை உடைய நுண்ணிய நூலால் ஆன உடையை ஔவையாருக்கு அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பொகுட்டெழினி நல்கினான்.

**ஊர்உண் கேணிப் பகட்டு இலைப் பாசி**

**வேம்புரை சிதாஅர் நீக்கி, நேர்கரை**

**நுண்நூல் கலிங்கம் உடீஇ**

**(புறம். 392)**

**புகர்**

ஆடைகளைத் துவைப்பதற்காகப் போடப்படும் கஞ்சியைப் புகர் என வழங்குவர். ஆடைகளை வெளுப்பதற்கு ஓய்வின்றி உழைப்பவள் புலத்தி; அவள் இரவில் தோய்த்த சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூ வேலைப்பாடுமிக்க ஆடையும் பொன்மாலையும் அசைந்தாடப் பரத்தை ஓடுவாள்.

**வறன் இல் புலைத்தி எல்லித் தோய்த்த**

**புகாப் புகர் கொண்ட புன் பூங் கலிங்கமொடு**

**வாடா மாலை துயல்வர ஓடி**

**(நற். 90)**

**உத்தரியம்**

உத்தரியம் என்பது மேலாடையைக் குறிக்கும் சொல்லாகும். கலித்தொகைச் செய்யுள் ஒன்று தலைவனின் குதிரை அழகை உரைக்கிறது. அக்குதிரை, கண்டால் அச்சம் தரும் எழில் மிகுந்த சாட்டை அணியப் பெற்றிருக்கும். நூலால் செய்யப்பட்ட உத்தரியமாகிய திண்ணிய மேலாடையைப் போர்த்தியிருக்கும் என்கிறாள் தலைவி.

**மத்திகைக் கண்ணுறையாகக் கவின் பெற்ற**

**உத்தி ஒரு காழ், நூல் உத்திரியத் திண் பிடி**

**(கலி. 96)**

பரத்தையர்பால் சென்று வந்திருக்கும் தலைவனிடம் குதிரையைப் பரத்தையருக்கு ஒப்பாக உவமித்து உரைக்கிறாள் தலைவி. அழகுமிக்க குதிரையை அணிகள் புனைந்துள்ள பரத்தைக்கு ஈடாகக் கருதும் தலைவி கூற்றுப் பாடல் மருதக் கலியில் இடம்பெற்றுள்ளது.

**பை**

துணி, தோல் முதலியவற்றால் அமைந்த கொள்கலத்தைப் பை என்பர்.

**அறுவை தோயும் ஒருபெருங் குடுமி**

**சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்**

**ஆகுவது அறியும் முதுவாய் வேல**

**(அகம். 195)**

ஆடை சுற்றப்பட்ட பெரிய குடுமியையும் சிறிய பை தொங்க விடப்பட்ட பல தலையுடைய வளைந்த கோலையும் கொண்டவன் பேரறிவு வாய்ந்த வெறியாட்டு வேலன். இவன் பின்னர் நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளை முன்னரே அறிந்து கூறும் ஆற்றல் பெற்றவனும் ஆவான்.

**போர்வை**

உடலில் போர்த்தப்படும் துகிலைப் போர்வை என்பர். தலைவி, புதுமையான ஆடையால் தன் உடல் முழுதும் போர்த்திக் கொண்டாள். மிக்க புழுக்கத்தால் அவள் நெற்றியில் வேர்வை அரும்பியது. காற்று வருவதற்காக, போர்த்திய அவள் ஆடையைச் சிறிது களைவதாகத் தலைவன் கற்பனை செய்து தன் நெஞ்சிற்கு உரைக்கிறான்.

**முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ**

**பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர்**

**உறுவளி ஆற்றச் சிறுவரை திற என**

**ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்**

**(அகம். 136)**

அழகிய துகிலால் போர்த்திய போர்வையை எழில்பெற உடுத்தித் தன்னை மூடிக்கொண்ட மென்மையான, இனிய மார்பை உடைய காதலன் செய்த குறியைத் தேடிச் சென்று, அவன் வரவிற்காகப் பெண் ஒருத்தி காத்துக் கொண்டிருந்தாள்.

**அம் துகில் போர்பை அணிபெறத் தை இ, நம்**
**இன்சாயல் மார்பன் குறி நின்றேன் யான் ஆக**

**(கலி . 65)**

**பட்டு**

சங்க இலக்கியத்தில் வரும் பட்டு என்னும் சொல் பட்டாடையை குறிக்கும். இரவில் அழகுமிக்குத் தோன்றும் சந்தனத்துடன் எழில்கொண் பட்டாடை ஒளிவீசுகிறது. வளைந்த மகரக்குழை அணிந்த மகளிரைப் போலத் தலைவன் அச்சத்தோடும் நாணத்தோடும் ஒதுங்கி நிற்கிறான்.

**அணிகிளர் சாந்தின் அம்பட்டு இமைப்ப,**
**கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை**

**(அகம். 236)**

**தொகுப்புரை:**

- சங்க காலத்தில் பரந்து விரிந்த நிலப்பகுதிகளில் பருத்தி பெருமளவு சாகுபடி செய்யப்பட்டமையால் பஞ்சு மூட்டைகள் இல்லந்தோறும் நிரம்பி இருந்தன.
- தழையாடையையும் மரவுரியையும் தோலாடையையும் சங்கத் தொகை இலக்கியங்கள் பெரிதும் வருணிக்கின்றன.
- சங்க காலத்தில் உருவான எண்ணற்ற ஆடைகள் எழிலான தோற்றம். நிறம் வடிவம், தன்மை. அளவு முதலானவற்றில் மாறுபாடு கொண்டிருந்தன.
- சங்க கால உடைகள் அவற்றின் இயல்புக்கேற்றவாறு முப்பதிற்கும் மேலான கலைச்சொற்களில் தொகை நூல்களில் விவரிக்கப்படுகின்றன.
- அறுக்கப்படுவதால் அறுவை என்றும் கிழிக்கப்படுவதால் கிழி என்றும் உடுத்தப்படுவதால் உடை என்றும் துண்டாக்கப்படுவதால் துணி என்றும் வெட்டப்படுவதால் வேட்டி என்றும் ஆடைக் கலைச்சொற்கள் பிறந்துள்ளன. சங்கத் தொகையில் மனையியலில் காணப்படும் உடை கலைச் சொற்களைக் குறித்து இக்கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளது.

**துணைநின்ற பார்வை நூல்கள்**

1. மோகன்,இரா. (உரை.) **பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)** முதற் பகுதி, என்.சி.பி.எச்.பி.லிட்., சென்னை.4ஆம் பதிப்பு, 2011
2. அகத்தியலிங்கம்,ச. **சங்க இலக்கியங்கள் செவ்வியல்** இலக்கியங்களே,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2010
3. அண்ணாதுரை,கு. (பதி.) **கலைச்சொல்லாக்கம் - அறிவியல்கல்வி, பொது அறிவியல்** தமிழக அறிவியல் ஆசிரியர் மன்றம், நான்காம் மண்டலக் கருத்தரங்கு, தஞ்சாவூர்.2003